
புதிய சமதர்மம்
புதிய உலகம் படைப்போம்
පුදීය සමධර්මම් Puthiya samadharam

நாங்கள் விக்ரமபாகுவை ஆதரித்தது - அவர் தொடர்ச்சியாகவும், துணிச்லுடனும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து வருவதாலும்..........

அஜித் ரூபசிங்க



இதழ் 90 ஜனவரி 2010 விலை ரூபா 20/=

# பிரதான இரு வேட்பாளர்களையும் தோற்கடிப்போம்

**எதிாவரும் ஜனாதிபதி தேர்தலில் பிரதான கட்சிகளின சார்பில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஸ, சரத்பொன்சேகா ஆகிய இருவரையும் முதல் சுற்றில் தோற்கடிப்பதற்கு நாம் தயாராக வேண்டும். இவ் இரு வெட்பாளர்களும் முதற் சுற்றில் 50% விகிதத்திற்கும் குறைவான வாக்குகளை பெறுவார்களாயின், இரண்டாம் கட்ட வாக்கு கணக்கீட்டுக்கு இவர்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.தமிழ் மக்கள் தமது கொள்கையில் இருந்து சற்றேனும் பின்வாங்கவில்லை. என்பதையும், பிரதான இரண்டு அணியின் தலைவர்களைதமிழ் மக்கள் அங்கீகரிக்கவில்லை என்பதையும் இதன் மூலம் உலகத்திற்கு தெரியவைக்க முடியும்.**



இன்று ஜனாதிபதி வேட்பாளர்களாக களத்தில் நிற்கும் பிரதான வேட்பாளர்களில் மகிந்த ராஜபக்ஸவும், சரத் பொன்சேகாவும் இந்த நாட்டின் சமூக பொருளாதார மாற்றம் தொடர்பிலோ தேசி இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலோ எத்தகைய திட்டத்தையும் முன்வைக்கவில்லை. இந்த இரண்டு வேட்பாளர்கள் பின்னாலும் பேரினவாத சக்திகள் இரு அணியாக பிளவுபட்டு நிலை கொண்டுள்ளன. மகிந்த ராஜபக்ஸ பின்னால் விமல் வீரவன்ச, சம்பிக்க தலைமையிலும், சரத் பொன்சேகா பின்னால் ஜே.வி.பி தலைமையிலும் உள்ளனர். தேசிய இனப்பிரச்சினை தீர்வு, பேச்சுவார்த்தை என்ற சொற்களை கூட மகிந்த ராஜபக்ஸ பேசுவதற்கு அவருக்கு பின்னால் இருக்கும் பேரினவாத சக்திகள் அனுமதிக்க வில்லை. அதே போன்று சரத் பொன்சேகா 13 வது திருத்தம் தொடர்பாக எதையும் கூறவில்லை என்றும் 13 வது திருத்தம் மூலம் எத்தகைய தீர்வுக்கும் சரத் பொன்சேகா போகமாட்டார் என்றே ஜே.வி.பியினர் வாதிக்கின்றனர். மேலும் சரத் பொன்சேகா கூட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை, ஊழல், என்பவற்றை ஒழிப்பேன் என்று கூறுகின்றாரேதவிர தேசிய இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பது தொடர்பில் ஒரு வார்த்தை கூட வெளிப்படுத்தவில்லை. மகிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றால் முடிவு கிடைக்கும் என அவர் பின்னால் நிற்கும் தமிழ் தரப்பு கூறுகின்றது. இவர்கள் எதைவைத்து இதைக் கூறுகின்றார்களோ தெரியவில்லை.

. 2005ம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தல் களத்தில் நின்ற போது இருந்த நிலைப்பாடு இன்று ஐக்கிய தேசிய கட்சியிடம் இல்லை. தமிழ் மக்களுக்கு சமஸ்ட்டி தீர்வை இன்று ஐக்கிய தேசிய கட்சி கைவிட்டுள்ளது. பேரினவாத சக்தியான ஜே.வி.பியுடன் அக் கட்சி உடன்பாட்டுக்கு போவதற்கு சமஸ்ட்டி முறையை கைவிவேண்டும் என்பது ஜே.வி.பியின் நிபந்தனையாகும். மேலும் ஐக்கிய தேசிய கட்சியில் சரத் பொன்சேகாவை வேட்பாளராக ஆதரிக்கின்றமைக்கு எதிர்ப்புக்கள் உள்ளன. இதனால் பலரும் வெளியேறி உள்ளனர்.

போரையும், போர் வெற்றி நிகழ்வையும், அவசரகால

6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல்

# முக்கியத்துவம் மிக்க ஜனாதிபதி தேர்தலில் பொதுவான இடதுசாரி வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும்



அஜித் ரூபசிங்க

பரந்த சிங்கள அமைச்சரவை சிங்களம் மட்டும் கொள்கை, அரச ஆதரவுடன் ஏவிவிடப்படும் இனவன்முறைகள், தரப்படுத்துதல் கொள்கை, தேர்தல் மோசடிகள், நூலகங்களை எரித்தல் இறுதியில் தாய்நாட்டை காப்பாற்ற மேற் கொள்ளப்படும் யுத்தம் என கூறி பேரினவாத வகுப்பின் மேலாதிக்கத்திற்காக நடத்தப்படும் நடவடிக்கைகள் இந்த நாட்டில் வாழும் ஒருவரிடம் கடந்த 60 வருட கால இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருவது எது என்று கேட்டால் அவர் தேசிய இனப்பிரச்சினை என்றே ஒப்புக்கொள்வார்.

இலங்கையில் காலனித்துவ ஆதிக்கத்தின் பின் உருவான அரசியல்போக்கை பிரித்தானியர்களே வடிவமைத்தனர்.நாட்டில் வலதுசாரி பிரிவினரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தியதுடன் அவர்கள் ஊடாக தமது நலன்களை நிறைவேற்றி கொள்வதே அவர்களின் இலக்காக இருந்தது. இங்கனம் உருவான அதிகார கட்டமைப்பில் சிங்கள வலதுசாரி பிரிவினரே மேலாதிக்கம் பெற்றனர். இவர்கள் இந்த நாட்டின் ஏனைய தேசிய இனங்களையும் குறிப்பாக தமிழ், முஸ்லீம், மக்களையும் ஓரம்கட்ட தொடங்கினர். பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்க்மும் விதிவிலக்கில்லாமல் இந்த செயற்பாட்டை நேர்த்தியாக செய்து வந்தது. இவர்கள் சிங்கள, பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தை பிரதி பலிக்கும் வலதுசாரி முதலாளித்துவ அரசுக்குரிய நிகழ்ச்சிதிட்டத்தையே முன்னெடுத்து வந்தனர். அதேநேரம் மறுபக்கத்தில் இவர்கள் உலக ஏகாதிபத்தியத்திற்கும் சர்வதேச நிதி முதலாளித்துவ முகவர்களுக்கும் சேவை செய்பவர்களாகவும் காணப்பட்டனர். இந்த சிங்கள தரகு முதலாளித்துவ தலைமைகள் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி ஆகியவற்றை பிரதிநிதித்துவ படுத்தினர்.

இவர்களின் செயல் பாட்டில் வடக்கு கிழக்கு பகுதியை தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களைதிட்டமிட்ட ரீதியாகவும், தொடர்ச்சியாகவும் புறக்கணிப்புக்கள், வன்முறைகள் ஒடுக்கு முறைகள் மூலம் ஒடுக்கி வந்தனர். இதன் ஒட்டு மொத்த விளைவாக இலங்கை அரசின் போக்கு பரந்த சிங்கள அமைச்சரவை சிங்களம் மட்டும் என்ற அரசகொள்கை, அரச ஆதரவுடன் ஏவிவிடப்படும், இன வன்முறைகள், உயர்கல்வி தரப்படுத்தல் கொள்கை தேர்தல் மோசடிகள், நூலகங்களை எரித்தல் என்பவற்றுடன் இறுதியில் தாய்நாட்டை காப்பாற்ற மேற் கொள்ளப்படும் யுத்தம் என கூறி பேரினவாத வகுப்பின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்த மேற்கொள்ளும் கொடுமையான நடவடிக்கைகள் என பிரதிபலித்தன.

இவர்கள் இடையே இருக்கும் பொதுவான ஒற்றுமை என்னவென்றால் ஈவு இரக்கமின்றி பொதுமக்களின் செல்வத்தை கொள்ளையடிப்பதும் இந்த கொள்ளையடிப்பை கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவிற்கு ஊழல்கள் மூலம் நிறைவேற்றுவதும் ஆகும். கடந்த சாகாப்த்த காலத்தில் அரசியல் போராட்டங்கள் ஊடாக விடுதலைக்காக போராடிவந்த நவீன தமிழ் தேசியத்தின் விடுதலை போராட்டம் தற்போது உறுதியடைந்துள்ளது. இதேநேரம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இராணுவ நடவடிக்கையின் மூலம் ஒடுக்கப்பட்டுள்ளது. அதன் தலைமையையும் இன்றைய அரசால் அழிக்கப்பட்டுள்ளது. இன்று இந்த தரகு முதலதளித்துவ சக்திகள் கறைபடிந்த கரங்களுடனும், பயங்கரவாதத்தின் துணையுடனும் எம்முன்னே தோன்றி தம்மை அங்கீகரிக்கும் படியும் தமக்கு சட்டரீதியான அந்தஸ்தை வழங்கும் படியும் கேட்கின்றனர். இந்த தேர்தல் முக்கிய திருப்பு முனையை ஏற்படுத்தக் கூடிய சூழ்லையை உருவாக்கியுள்ளது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை பொறுத்தவரையில் எமது நிலைப்பாடு மக்களை ஜனநாயக புரட்சிக்கு வழிநடத்துவதுடன், ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருக்கும் தேசிய இனங்களையும் சமூக பிரிவினையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை ஏகாதிபத்திய சக்திகளிடம் இருந்தும் முதலாளித்துவ பிரிவினரிடமும் இருந்தும் மீட்டெடுப்பதே ஆகும். நாங்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சியை முன் எடுப்பதையே நிலைப்பாடாக கொண்டுள்ளோம் இதன் மூலம் இன்றுள்ள சமுதாய ஒழுங்கு முறைமையை தூக்கியெறிவதுடன் இவற்றை செயற்படுத்தும் மேலாதிக்க சக்திகளுக்கு முடிவு கட்டுவதாகும்.

**சுயநிர்ணய உரிமை**

நாங்கள் பிரிவினை தான் தீர்வு என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை ஆனாலும் நாங்கள் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரிவினையோடு கூடிய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதுடன், அவர்களின் பாதுகாப்பு, கௌரவம், சமத்துவம், சுதந்திரம் என்பவற்றுக்காகவும் போராடி வருகின்றோம். நாம் தமிழ் மக்களிடம் புரிந்துணர்வுடன் கூடிய ஜனநாயக ஒன்றியத்தை ஆதரிக்கும் அதேநேரம் அவர்களின் இலட்சியத்தை மழுங்கடிக்கும் எத்தகைய தீர்வு முயற்சியினையும் எதிர்ப்போம். நாம் இந்த தேர்தலில் சுதந்திரத்துக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாட்டை இந்த ஜனாதிபதி தேர்தல் மூலம் முன்னெடுக்க முடியும் என நம்புகின்றோம். மேலும் இந்த மோசமான ஜனாதிபதி முறையை அங்கீகரிக்கும் நிலைப்பாடு எம்மிடம் துளி அளவு கூட இல்லை.

தற்போது யுத்த கதாநாயகன் மகிந்த ராஜபக்ஸவும், ஜெனரல் சரத் பொன்சேகாவும் எதிரும் புதிருமாக களத்தில் உள்ளனர். மகிந்த ராஜபக்ஸ பாரம்பரிய பிரபுத்துவ சிங்கள பௌவுத்த அணியினரை திருப்தி செய்யும் நிகழ்ச்சி நிரலோடும் சரத் பொன்சேகா, தாராளவாத அரசியல் அமைப்பு சீர்திருத்தம், மற்றும் ஜனநாயக திட்டத்துடனும் பதவிக்கு வரத்துடிக்கின்றனர்.இவர்கள் இடையேயான முரண்பாடு சாதாரண முரண்பாடு ஆகும். இது வாக்காளர்களை கவர்ந்திழுக்கும் தந்திரமாகும் உண்மையில் இவர்கள் இருவரும்சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதே இவர்களின் இலக்கு ஆகும். இந்த செல்வாக்கு தளத்தை காப்பாற்ற வேண்டுமானால் இவர்கள் தமிழ், முஸ்லீம் மக்களையும், ஏனைய மத, சமூக பிரிவினரையும் தொடர்ச்சியாக ஒடுக்கு முறைக்கு உள்ளாக்க வேண்டும். மேற்படி ஒழுங்கில் முரண்பாடுகள் பின்னடைவுகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன.

தற்போது அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும், சரத் பொன்சேகாவை ஆதரிக்க இந்தியா, சீனா, பாக்கிஸ்தான், ஈரான் மகிந்த ராஜபக்ஸவை ஆதரிக்கின்றன. எவர் எவரை ஆதரித்தாலும் ஆதரிக்கின்றவர்களின் உண்மையான எதிர்பார்ப்பு இயக்கத்தில் இருக்கும் முறைமைக்கு எதிரான புரட்சிகள் எழுச்சிகள் எனபவற்றை ஈவு இரக்கமற்ற முறையில் ஒடுக்கவேண்டும் என்பதேயாகும்.இதுவே இன்றைய முதலாளித்துவ உலகின் ஒழுங்கு முறையாகும் நான் இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லீம் மலையக பிரதிநிகளிடம் கேட்கவிருப்பது இதைத்தான். இந்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு உண்மையான ஜனநாயக தேர்வை எங்களால் செய்யமுடியாதா? என்பதையே!


இது முற்று முழுதான முதலாளித்துவ தேர்தலானாலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி முன்னணி வேட்பாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னாவை ஆதரிக்கின்றது. இதற்கு முக்கிய காரணம்இந்த தேர்தல் ஒரு வரலாற்று திருப்பு முனையை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையில் வந்துள்ளது. எமது மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றதாயும்அமைந்துள்ளது நாங்கள் ஒன்றிணைவதின் மூலம் அதாவது இந்த நாட்டில் உள்ள முற்போக்கு சக்திகள், புரட்சிகர சக்திகள் ஒன்றிணைவதின் மூலம் பேரினவாத சக்திகளின் எதிர்பார்ப்புக்களை தோற்கடிக்க முடியும். இந்த தேர்தல் வடக்கு கிழக்கு மக்களினதும் அவர்களின் சுயநிர்ணய உரிமை போராட்டம், மலையக மக்கள், முஸ்லீம் மக்கள் ஏனைய மதங்கள் சமூகக் குழுக்கள் என்பவற்றின் ஜனநாயக உரிமைகளை தீர்மானிக்கின்ற தேர்தலாக உள்ளது.

சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் முக்கிய கட்டத்தில் இந்த தேர்தல் உள்ளது. மேலும் நாங்கள் கொள்கை ரீதியாக, கருத்தியல் ரீதியாக, அரசியல் ரீதியாக மூலோபாய ரீதியாக வேறுபட்ட நிலைகளில் இருந்தபோதும் சமூக புரட்சியை எப்படி முன் னெடுப்பதில் இருந்து நாங்கள் தோழர் விக்ரமபாகு கருணாரத்னவை நம்பிக்கையுடன் இந்த காலகட்டத்தில் ஆதரிக்க முடிவுசெய்ள்ளோம். இதற்கு முக்கிய காரணம் தோழர் விக்ரமபாகு கருணாரத்ன தொடர்ச்சியாகவும், துணிச்சலுடனும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தை ஆதரித்து வருவதுடன் மேலும் அவர் 200000 யுத்தத்தில் இடம் பெயர்ந்து முகாம்களுக்குள் முடக்கப்பட்டு இருக்கும் மக்களை விடுவிக்க கோரியும் 12000 அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் போராடிவருகின்றமையும் அவர் மனித உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன் என்பதனால் ஆகும்.

இது நபர்களின் உயர்வு தழ்வு பற்றிய பிரச்சினை அல்ல இங்கே பேரினவாத, பாசிசவாத தளத்தில் உள்ளவர்களுக்கும் முற்போக்கு புரட்சீகர சக்திகளுக்கும் இடையேயான களமாக உள்ளது. இன்று களத்தில் இருக்கும் பிரதான அணிகளின் வேட்பாளர்கள் இருவரும் யார் இந்த நாட்டு தமிழ் மக்களின் இரத்தத்தை வேகமாக குடிக்கக்கூடியவர்கள் யார் இந்த நாட்டின் தேசிய இனங்களை, மதங்களை ஏனைய சமூககுழுக்களை விரைவாக ஒடுக்கவேன் என்பதிலேயே போட்டியில் உள்ளனர். மேலும் இவர்கள் இந்த நாட்டை அமெரிக்க உளளிட்ட ஏகாதிபத்திய சக்திகளிடமும் இந்திய ஆதிகாரவர்க்கத்திற்கும் முதலில் தாரை வார்ப்பது என்பதிலேயே போட்டியாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலும தமிழ் கட்சிகளும



வ. திருநாவுக்கரசு

நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பேரினவாத சக்திகள் துருவப்பட்டுருப்பதை காணக்கூடியதாக உள்ளது. வெற்றி நிச்சயம் என்ற இறுமாப்பில் இருந்த மகிந்த ராஜபக்சவின் நம்பிக்கை தகர்ந்துள்ளது.

இந்த சூழ்நிலை நாட்டில் வாழும் ஏனைய தேசிய இனங்கள் மற்றும் முதலாளித்துவ சக்திகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் மக்கள் பிரிவினருக்கு சாதகமான நிலையாக காணப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஸவிற்கு எதிராக சர்வதேச சதியாம்.

வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஸவை தோற்கடிக்க சர்வதேச சதி இடம்பெறுவதாக அரசாங்கத்தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். பாதுகாப்பு செயலாளர் கோதபாய ராஜபக்ஸ அண்மைய நிகழ்வொன்றில் இதை விலாவாரியாக விளக்கி இருந்தார். அதாவது அன்று விடுதலைப் புலிகளை பாதுகாப்பதற்காக அரசாங்கத்திற்கு அளுத்தத்தை கொடுத்த சக்திகள் இன்று வேறுவழியாக ஈழம் என்ற விடுதலைப் புலிகளின் கனவை நனவாக்க முயலுவதாக கோதபாய குற்றம் சாட்டுகிறார். மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் புரிந்துள்ள பாவங்களுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் யார் குரல் கொடுத்தாலும் ஆட்சியாளர்கள் அதை சதி என்றும், துரோகம் என்றும் அழைக்கின்றனர். இவற்றின் ஊடாக சர்வதேசமட்டத்தில் இருந்து ஒதிக்கி வைக்கப்படும் நிலை தோன்றும். அது தொடங்கியுள்ளதற்கான செயற்பாடுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் நடைபெற இருக்கின்ற பொது நலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, மேற்படி மாநாடு அவுஸ்ரேலியாவில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இதில் உள்ள சோகம் என்றவென்றால் இந்தியா இந்த மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டும் என ஆதரவு தெரிவித்த போதும் இந்தியாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேக்காவின் அரசியல் பிரவேசம்

முன்னைநாள் இராணுவ தளபதியும் பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியுமான சரத் பொன்சேக்காவை இந்த நிலைக்கு உயர்த்தியவர் மகிந்த ராஜபக்ஸவே. இறுதியில் யுத்த வெற்றியில் யாரின் பங்களிப்பு அதிகம் என்ற சர்ச்சையில் சரத் பொன்சேகா எதிர் கட்சிகளின் முகாமுக்குள் சென்றுள்ளார். யுத்த வெற்றியை அரசாங்கம் சமாதானத்திற்கு பயன் படுத்தவில்லை என்பதே சரத் பொன்சேகாவின் புதிய தத்துவமாக உள்ளது.

இவர் இப்படி இன்று பேசுகின்றார். ஆனால் இவர் பதவியில் இருந்த காலப்பகுதியில் சமாதானம் பற்றியோ தமிழ் மக்களின் எழுச்சி பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை மாறாக பேரினவாத சக்திகள் எத்தகைய பிரச்சாரங்களில் ஈடுபட்டனரோ அதை அங்கீகரிக்கும் போக்கிலே இவரது செயற்பாடும், கருத்துக்களும் அமைந்திருந்தன. ஆனால் இவருக்கு முன்பு இருந்த இராணுவத் தளபதிகள் குறிப்பாக டென்சில் கொப்பாகடுவ போன்றவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு போரின் மூலம் தீர்வை கொண்டுவர முடியாது, அரசியல் தீர்வின் மூலமே இதை தீர்க்க முடியும் என கூறியிருந்ததை நாம் மறக்கமுடியாது.

இவர் ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலைக்கு வந்தவுடன் யுத்த வெற்றியானது ஒரு இனத்துக்கு எதிரான வெற்றியல்ல என்றும், தான் ஜனாதிபதியானால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அகற்றிப் பொவதாகவும், ஊழல், வீண்விரையம் போன்றவற்றை முடிவுக்கு கொண்டு வருவதாகவும், இன்று இடம் பெயர்ந்த மக்களை அரசாங்கம் சரியாக நடத்தவில்லை என்றும்இம் மக்கள் மீள குடியமர்த்த படவேண்டும் என்றும் கூறியுள்ளார். ஆனால் இவர் இராணுவ தளபதியாக இருந்த காலத்தில் மேற்கூறப்பட்டதற்கு மாறாகவே அவரது செயற்பாடுகள் காணப்பட்டன. அதாவது கண்ணி வெடிகளை அகற்றும் வரை மெனிக் முகாமில் இருந்து விடுதலைப்புலிகளை களையும் வரை மீள் குடியேற்றம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்பதே இவரது கருத்தாக இருந்தது. உண்மையில் சரத் பொன்சேகா இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை உண்மையில் தீர்க்க விரும்புகின்றார் என்றால் அவர் முதலில் வடக்கு கிழக்கு, தமிழ் மக்களின் தாயகம் என்பதையும், அப்பகுதிக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பதையும் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அங்கனம் இல்லாமல் தேர்தல் காலத்துக்காக சில சொற்றொடர்களை வெளியிடுவாராயின் அவரை தமிழ் மக்கள் ஒருபோதும் நம்பவும் மாட்டார்களஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். "கால் மார்க்ஸ் கூறிவைத்ததையே இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன் அதாவது இவர்கள் நரகத்துக்கான பாதையை செப்பனிடுகின்றவர்கள்" என்றே கூறமுடியும்

தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வரலாறு முழுக்க நாம் ஏமாந்து விட்டோம் என்ற பல்லவியை நாம் தொடர்ந்து இசைக்க முடியாது. இன்று தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பிரதான இரண்டு வேட்பாளர்களும் வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர் மகிந்த ராஜபக்ஸ கூறுகிறார் இந்த நாட்டில் சிறுபான்மை பெரும்பான்மை என்ற நிலை இல்லை என ஆனால் பொன்சேகா அவர்கள் இங்கு சிறுபானடமையினர் பெரும்பான்மையினர் என உள்ளனர். பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைசொந்த மக்கள் போல் நடத்த வேண்டும் என்றும் கூறுகின்றார்.

எனவே தமிழ் மக்கள் இரண்டு பிரதான அணியின் வேட்பாளர்களை இனம் கண்டு கொள்ளவேண்டும். கடந்த 60 ஆண்டுகாலமாக நாம் ஏமாந்த போதும். நாம் நம்பிக்கை வைக்க கூடிய மூன்றாவது சக்தி ஒன்றை அடையாளம் கண்டு அந்த சக்தியை வளர்ப்பதற்கு முன்வர வேண்டும். அதன்மூலமே எமது விடுதலையை அடைய முடியும்.

தமிழ் தலைமைகள் இதனை நன்கு புரிந்து கொண்டு செயற்படுவது அவர்களின் கடப்பாடாகும். எனவே தமிழ் தேசிய கூட்டமைப்பு அடங்கலான தமிழ், முஸ்லீம் தலைமைகள் மிக்க நிதானமாக முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் இதுவாகும்.

## வாழ்க்கை தரத்தில் கியூபா உச்சநிலையில் (ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளிப்படுத்தும் உண்மை நிலை இது)

2009 ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளுக்கான மனித அபிவிருத்தி திட்டத்தின் மனிதவள அறிக்கை கடந்த மாதம் 5ம் திகதி வெளியிடப்பட்டது. மனித அபிவிருத்தியில் கியூபாவின் வியத்தகு சாதனைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கை பொதுவாக அபிவிருத்தி தொடர்பான புள்ளி விபரங்களை கோடிட்டு காட்டியுள்ளது. அத்துடன் நாடுகளின் அபிவிருத்தி ஒப்பிட்டு காட்டப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான பரந்த அடிப்படையிலான புள்ளி விபரங்களின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கை தரத்தை வெளிப்படுத்தும் மனித அபிவிருத்திக்குரிய சுட்டி முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்த மனித அபிவிருத்தி சுட்டி தாய்சேய் மரணவிகிதம், எழுத்தறிவு.பாடசாலை செல்லுதல், இவற்றுடன் தலாவிகித வருமானம் என்பவை 182 நாடுகளில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிகக்காவின் மோசமான பொருளாதார தடை தலையீடுகள் என்பவை கியூப அபிவிருத்திற்கு பாரிய தடையாக இருந்த போதும்கியூபாவில் சுகாதாரம், மக்களின் கல்வி, என்பனசாதனை நிலைக்கு சென்றுள்ளது. கியூபாவின் கல்வி வளர்ச்சி உலகில் அதி உச்ச நிலையில் காணப்படுகிறது. குறிப்பாக அவுஸ்ரேலியா, பின்லாந்து, என்பவற்றையும் விட உச்ச நிலையில் உள்ளது.

கியூபாவில் வயதுவந்தவர்களின் எழுத்தறிவு வளர்ச்சி 99.8 வீதமாகும் பாடசாலைக்கு செல்லும் வீதம் நூறு விகிதமாகும் மேலும் பொது கல்விக்காக 14.2 விகிதம் செலவிடப்படுகிறது. அவுஸ்ரேலியாவில் இது 13.3 விகிதமாகவும், அமெரிக்காவில் 13.7 விகிதமாகவும் காணப்படுகிறது.

உலகிலேயே கியூபா பாடசாலைக்கு செல்லும் ஆண், பெண், விகிதாசாரத்தில் முதல் நிலைவகிக்கிறது. கியூப மக்களின் ஆயுட்கால விகிதம் 78.5 ஆக உள்ளது. இது லத்தின் அமெரிக்க கரிபியன் நாடுகளைவிட அதிகமானதாகவும். இந்த நிலை அவுஸ்ரேலியாவில் 81.4 வருடங்களாகவும் அமெரிக்காவில் 79 வருடங்களாகவும் உள்ளது. கியூபாவின் கல்வி, சுகாதார



வளர்ச்சி உச்சநிலையில் காணப்பட்டாலும் தலாவிகித வருமானம் குறைவாகவே உள்ளது. மனித அபிவிருத்தியில் கியூபா உலகில் 51வது இடத்தில் உள்ளது. தலாவிகித அடிப்படையில் கியூபா 95 வது இடத்தில் உள்ளது. கியூபாவில் தலாவிகித வருமானம் குறைவாக இருக்கும் அதே நேரத்தில் மனித அபிவிருத்தி உயர்ந்த நிலையில் உள்ளது.


மேற்படி இந்த இருபிரிவு வேறுபாடுகளை கொண்டு அவதானிக்கின்றபோது நாட்டின் தேசியவருமானம் மிகவும் புத்திசாதூரியமான முறையில் மக்களின் சுகாதாரம், கல்வி என்பவற்றுக்கு உபயோகிக்கப்படுகிறது என்பதை உணரமுடியும்.

உதாரணமாக அமெரிக்கக மொத்த தேசிய உற்பத்தில் கியூபாவைவிட பல மடங்கு அதிகமாக காணப்படுகிறது. ஆனால் மனித அபிவிருத்தி. குறைவாகவே உள்ளது. அமெரிக்கா உலகில் தலாவருமானத்தில் 9வது இடத்தை வகிக்கிறது. ஆனால் மனித அபிவிருத்தியில் 13வது இடத்தில் உள்ளது. அங்கே மக்களின் சுகாதாரம், கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சுயாட்சிக்கான பொது இடதுசாரி தேர்தல் விஞ்ஞாபனம்

## 2010 ஜனாதிபதி தேர்தலில் வெளியிடப்பட்டது.



**சரிசமனாக இரத்தம் தோய்ந்த பேரினவாத, உலக முதலாளித்துவத்தின் பிரதிநிதிகள் ஈடுபட்டிருக்கும் கொடிய சதுரங்க விளையாட்டில் நகர்த்தப்படும் காய்களாக நாம் இருக்கமுடியாது.**

ஆம்,120கோடி பணச்செலவில் மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தலுக்கு முகம் கொடுக்கப் போகிறோம்.சரிசமனான இரத்தம் தோய்ந்த, ஊழல் நிறைந்த ஒட்டுண்ணி முதலாளித்துவ கட்டமைப்புகள் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா ஊடக முன்வந்து நிற்கின்றன. ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரமானது ஆளும் வர்க்கத்தினரின் சரிசமனான பிற்போக்குத் தனமான முகாம்களினால் மிகக் கசப்பானதாகவும் மிக மூர்க்கத்தனமாகவும் அமையப் போகிறது. இந்தவகையில் இலங்கை மக்கள் மீது பேரினவாத ஆட்சியை திணிப்பதற்கும் தமிழ் மக்களினதும் ஏனைய சமூகங்களினதும் இரத்தத்தை விருந்தாக்குவதற்கு யார் வரப்போகின்றார் என்பதே இத் தேர்தலில் தீர்மானிக்கப்படும். ஆளும் வர்க்கத்தினரின் இரு போட்டி முகாம்களும் நடத்தவுள்ள கேடுகெட்ட சதுரங்க விளையாட்டில் நகர்த்தப்படும் காய்களாக மட்டும் நாம் இருக்க முடியாது. மக்களுக்கும் மனித குலத்திற்கும் எதிராக திட்டமிட்டு புரியப்படும் குற்றத்திற்காக நாம் இந்த் அரசையும் இந்த ஆளும் வர்க்கத்தையும் பொறுப்புக் கூறும்படி வற்புறுத்த வேண்டும். தற்போது நிலவும் உலகமய சார்பான முதலாளித்துவ அரசியல் நிலைமை, மற்றும் இரு ஆளும் தரப்பு வேட்பாளர்களும் தம்மகத்தே கொண்டுள்ள இராணுவ, பேரினவாத மற்றும் பாசிச நிகழ்சி நிரலுக்கு எதிராக இந்த அடிப்படையிலேயே மக்களை அணிதிரட்ட வேண்டும்.

**முடகம்பி முகாம்களில் தடுத்துவைக்கப் பட்டிருப்பவர்கட்கும் அரசியல் கைதிகளுக்கும் விடுதலை வேண்டும். அவசரகாலச் சட்டங்கள், பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் கொடூரமானசட்டங்கள் ரத்தாக வேண்டும். ஒற்றை ஆட்சி அரசு ஒழிக்கப்பட வேண்டும்.**

நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார் அடங்கலாக 200000 உள்ளூர் இடம் பெயர்ந்த மக்கள் இராணுவகட்டுப்பாட்டின் கீழ் இழி நிலைமைகளில்

### பேரன்பு மிக்க இலங்கை மக்களே!

தொடர்ந்து சிறைவைத்திருப்பது இமாலயக் குற்றச்செயலாகும். யுத்தம் நடைபெற்ற போது இழைக்கப்பட்ட மிக மோசமான குற்றவியல் செயற்பாடுகளும் இப்போது இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல்களும், மனித குலத்திற்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளும், 17 மனிதபிமான உதவித் தொழிலாளர், 5 மாணவர்கள், கௌரவ ஜோசப் பரராஜசிங்கம், பா.உ கௌரவ நடராசா ரவிராஜ் கௌரவ சிவநேசன், ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க மற்றும் ஏனையோர் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொல்லப்பட்டதற்கு யார் பொறுப்பு? இத்தகைய மிலேச்சத்தனமான குற்றச் செயல்கள் மட்டுமல்லாமல், பல்வேறு தடுப்பு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் 12,000 அரசியல் கைதிகள் நீதி விசாரணை எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அடாவடித்தனத்திற்கு யார் பொறுப்பு? இவ் இருள் முகாம்களில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக அல்லலுறுகின்றனர். எமது எல்லோரினதும் கௌரவம் வீண்தனமாக அசிங்கப்படுத்தப்படும் இச்சந்தர்ப்பத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் அரசியல் கைதிகளை நிபந்தனைகள் ஏதும் இன்றி உடனடியாக விடுவிக்க உழைப்பது எமது கடமையாகும். உள் நாட்டில் இடம் பெயர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இம் மக்கள் விடுதலை செய்யப்படும் வரை அவர்கள் தம் சொந்த பிரதிநிதிகளாலேயே மேற்பார்வையும், முகாமைத்துவமும் செய்யப்பட வேண்டும். அவர்கள் தம் சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வாழும் உரிமையை அனுபவிப்பதற்காக அவ்வப்பகுதிகளில் உள்ள இராணுவ மய நிர்வாகமும் உயர்பாதுகாப்பு வலயங்களும் அகற்றப்படுவதுடன் ஆயுதப்படையினரும் வாபஸ் பெறப்பட வேண்டும். அலசரகாலச் சட்டங்கள், பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அத்தகைய எல்லாவிதமான கொடிய பாசிச சட்டங்களும் இரத்துச் செய்யப்பட்டு உலகமய முதலாளித்துவ சார்பு சிங்கள மேலாதிக்க அரசு தகர்க்கப்பட வேண்டும். அதன் அடிப்படையிலேயே தமிழ் தேசிய இனம் வடக்கு கிழக்கில் கௌரவமாகவும், சமத்துவமாகவும் சுயாட்சி, மற்றும் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும். மேலும் மலையக தமிழ் சமூகம், முஸ்லீம் சமூகம் மற்றும் எல்லா இன, மத சமூகங்களும் பாதுகாப்புடனும் ஜனநாயக சுதந்திரத்துடனும் வாழலாம்.

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், தேசிய மூலதனத்தைக் கொள்ளையடித்தல் இயற்கை வளங்களைச் சூறையாடல் மற்றும் மக்களின் இறைமையை மீறல் போன்ற ஈனச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தல், சுயாட்சி அடிப்படையில் அதிகாரம் பகிர்தல்**

முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்தன ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்காகவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கொண்டுவந்தார். பல்தேசிய கூட்டுத்தாபனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் முக்கியமான வகிபாகத்திற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமாயின் அவை கேட்கும் அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டும். எனவே, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையானது பல்தேசிய கம்பனிகளின் ஒரு கருவியாகவே அறிமுகப்படுத்தப்பட்டது அவை ஒன்றில் பொருளாதாரம் அல்லது பாதுகாப்பு அல்லது வேறு எது விடயம் தொடர்பாகவாயினும் ஏதாவது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டுமாயின், நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களுக்கு பொறுப்பான நிறைவேற்றுத்லைவர் ஊடாகச் செல்வது இலகுவாயிருக்கும். பாராளுமன்றத்தின் ஊடாகச் செல்லும் போது முகம் கொடுக்க வேண்டிய வெளிப்படைத்தன்மை மற்றும் விமர்சனம் எதனையும் கவனத்தில் கொள்வது அவசியமற்றதாகிவிடும். இது தொடர்பான தகவல் முதலியன ஜனாதிபதியின் செயலாளர்கள் மற்றும் ஆலோசகர்கட்கு மட்டும் தெரியப்படுத்தும் நிலையில் வேண்டிய தீர்மானங்களைத் தாமதமின்றி எடுத்துக் கொள்ளலாமல்லவா! எனவே உலகமய முதலாளித்துவம் சார்ந்த கடன் கொடுப்போர் மற்றும் கொள்ளையடிப்போரின் வசதிக்காகவே அது கொண்டு வரப்பட்டது. உலகமய முதலாளித்துவம் தான் நவீன ஏகாதிபத்தியத்தின் வடிவமாகும். அது சர்வதேச நாணய நிதியம் **(IMF)** உலகவங்கி**(WB)** உலக வர்த்தக ஸ்தாபனம் **(WTO)** ஆகிய நிறுவனங்களை முகாமைத்துவ அங்கத்தவர்களாகக் கொண்டு பல்தேசிய கம்பனி **(MNC)** முறைமையினை முற்று முழுதாக இணைத்து விடுகிறது. இவற்றையெல்லாம் நாம் விளக்கி 1978 பெப்ரவரி 4ம் திகதி ஆர்ப்பாட்டம் செய்து விளக்கியபோது விக்ரமபாகு சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது தான் எல்லோரும் இந்த வேதாளத்தை அகற்றியாக வேண்டும் என கூக் குரலிடுகின்றனர். ஆனால் அவர்கள் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது கண்டிப்பாக பதவி ஆசை காரணமாக அல்ல என்றாலும் சில உலக எஜமான்களின்சர்வதேச ரீதியான அழுத்தம் காரணமாக அவர்கள் அப்பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டியுள்ளது.

6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

## சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சுயாட்சிக்கான......

உள்ளூர் உணவு மற்றும் பண்டங்கள் உற்பத்தி முறைமை அழிப்பு, வேலைவாய்ப்பின்மை வறுமை மற்றும் நோய் நொடிகளை விளைவிக்கும் உலக முதலாளித்துவ மூலோபாயங்கள் நிறுத்தப்பட்டு மக்கள் மயமானதும் சுற்றுச் சூழல் பேணும்வகையிலானதுமான அபிவிருத்திப்பாதையில் செல்ல வேண்டும்

இன்று உலக முதலாளித்துவம் மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து குழம்பிப் போயுள்ளது ஆனாலும் சீர்படுத்துவதற்கு இதுவரை எடுத்த முயற்சிகள் போதுமானதாயில்லை. அடுத்து வரவுள்ள உணவு நெருக்கடி காரணமாக மனிதகுலத்தில் பெரும் பகுதியினர் பசி பட்டினியால் செத்து மடியும் அபாயமும் இன்று காணப்படுகிறது. எனவே எமக்கான உணவு உற்பத்தியை பெருக்குவது தொடர்பாக மிக ஆழமாகச் சிந்திப்பது மிக முக்கியமானதாகவும் (குறிப்பாக நெல், மீன், பால் போன்றவை) நாம் இன்று சூழல் நேயமான இயற்கையோடு இணைந்த, அணுகுமுறையினைக் கடைபிடிக்காவிட்டால் காலம் காத்திருக்க மாட்டாது.சுதந்திரம் ஜனநாயகம் மற்றும் சுயாட்சி வேண்டி ஒவ்வொரு கண்டத்திலும் மக்கள் சக்திகள் எதிர்ப்பு மற்றும் புரட்சி நடவடிக்கையில் கிளர்ந்தெழுகின்றன. நாமும் எமது சர்வதேச உழைக்கும் மக்களின் வர்க்கரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். இந்த தீர்க்கமான சந்தர்ப்பத்தில் நாம் உலக மக்களோடு இணைந்து வரலாறு படைக்க வேண்டும்.

கடந்த 3 தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்ட உப்புச் சப்பற்ற அபிவிருத்தி திட்டங்கள் தான் சிங்கள மற்றும் தமிழ் கிராமிய பிரேதசங்களில் வெடித்த கிளர்ச்சிகளுக்கு காரணமாகும் ஏனென்றால் பணக்காரர் மேலும் பணக்காரராகும் அதே வேளை மறுபுறத்தில் வறுமையும் விரிசலும் உருவாக்கப்பட்டன. உள்நாட்டு கைத் தொழில் துறையினர் மற்றும் உற்பத்தியாளர்கள் ஓரம் கட்டப்படுகையில் அதிகளவான மக்கள் சமுதாயத்தோடு தொடர்பற்று மனித தூசியாக வீசப்பட்டனர். குறிப்பாக, சேரிகள் மற்றும் கிராமிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் சிறார்களின் நிலைமை சொல்லுந் தரமற்றதாயுள்ளது. ஆணாதிக்க நிலை, இராணுவமயம் காரணமாக பெண்கள் மற்றும் பாதாள உலகத்தினர் பெருக்கம், வீட்டு அடிமைகளாக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இளைஞர்கள் மற்றம் தொழிலாளர்களின் போராட்டங்கள் காரணமாகக் கொண்டு எல்லா துறைகள் மீதும் பயங்கர அடக்கு முறை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊடகத்துறையினர் மிக மோசமான தாக்குதளுக்கு ஆளாக்கப்பட்டதால் பலர் உயிர் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு ஓடியுள்ளனர். மறுபுறத்தில் அபரி மிதமான இலாபத்தினை ஈட்டுவதை உலக முதலாளித்துவம் தாரக மந்திரமாய்க் கொண்டுள்ளதை எதிர்க்கும் போக்கினையே உலகில் காண முடிகிறது.உலக முதலாளித்துவம் கடிவாளமின்றி இலாபமீட்டும் செயற்பாட்டினை அகற்றி அன்பும் ஒத்துழைப்பும் அடங்கலானதொரு ஏற்பாடு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு மார்க்சிசம் கூட தேவைப்படாது. திரிபீடகம் (திரிப்பிடக), பகவத் கிதை, விவிலியம், மற்றும் குரான் நான்குமே வழி காட்டும் இவற்றில் அன்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான பகுதிகளைப்படித்தாலே போதும்.

வறுமை, கடன்பழு, வேளைவாய்ப்பின்மை மற்றும் இழிநிலை போன்ற ஈனங்களிலிருந்து விடுதலை அடைதல், ஊழல், மோசடி மற்றும் தேசியவளங்களைச் சூறையாடுதல் போன்றவற்றுக்கு முற்றுப் புள்ளிவைத்தல், அடிப்படை நாட்சம்பளம் ரூபா 500, குறைந்த பட்ச மாதாந்தச் சம்பளம் 15000 ரூபா மற்றும் எல்லோருக்கும் தொழிலும் வாழ்வாதாரமும் வேண்டும். ஒருபுறத்தில் அதிகப் பெரும்பான்மையான உழைக்கும், அல்லற் படும் மக்களுக்க வறுமை, கடன் பழு, துன்ப துயரம் இன்றி சுதந்திரமாக வாழும் உரிமைமறுக்கப் படுகிறது. மறுபுறத்தில், ஆளும் வர்க்கத்தினர் திறந்த பொருளாதார முறைமையின் வாயிலாக ஏராளமான சொத்துக்களை தம் வசப்படுத்துகின்றனர். சொந்த இலாபமீட்டியும் கொள்ளையடித்தும் தமக்கென சாம்ராஜ்யங்களைக் கட்டியெழுப்புகின்றனர். அப்பட்டமான ஊழல் மூலம் பொதுப் பணத்தை வீண்விரயம் செய்கின்றனர்.

பெருந்தோட்டதுறை தொழிலாளர் சம்பந்தமான கூட்டு ஒப்பந்தமானது தொழிலாளர்களைப் பிளவு படுத்தியதோடு அவர்களின் நலன்களும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் கொத்தடிமை நடைமுறை உருவாக்கப்படுத்துவதற்கு இது நல்லதோர் உதாரணமாகும். அது கிழித்தெறியப் படவேண்டும். தோட்ட தொழிலாளர்களின் நாட்சம்பளம் ரூபா 500 ஆகவும், அதேபோல் சகல துறைகளையும் சார்ந்த தொழிலாளர்களின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் ரூபா 15,000 ஆகவும் நிர்ணயப்படுத்த வேண்டும். அத்தோடு சகல அரச, தனியார் துறைகள் சார்ந்த தொழிலாளர்களின் ஊதியங்கள், சம்பளங்கள் சமகால வாழ்க்கைச் செலவுப் புள்ளிக் கேற்றவாறு உயர்த்தப்படவேண்டும். மற்றும் தொழிலாளர்கள், பட்டதாரிகள், மற்றும் மாணவர்கள் கொண்டுள்ள நியாயமான மனக் குமுறல்கள் ஜனநாயகமாகவும் நீதியாகவும் அணுகித் தீர்க்கப்பட வேண்டும். மாறாக குண்டாந்தடிப் பிரயோகம். கண்ணீர்ப் புகையடித்தல், கைது செய்தல் மற்றும் வன்முறை மூலம் அவர்களின் மனித மற்றும் ஜனநாயக உரிமைகளை நசுக்குதல் போன்ற துட்டச் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். தமிழரின் எழுச்சயையும், கொடூரமாக அழித்ததற்கு இன்றைய அரசாங்கம் ஏவிவிட்ட அதே ஆயுதப் படையினர் இன்று பெருந்தொகையான சிங்களத் தொழிலாளர்கள், மாணவர்கள் பட்டதாரிகள் மற்றும் பரந்து பட்ட ஏழை எளிய மக்களுக்கெதிராகப் பாவிக்கப்படுகிறது இதுதான் பேரினவாத வேட்பாளர்களின் "நாட்டுபற்று" ஆகும்

### ஆதிக்கம், சுரண்டல், பயங்கரமான அடக்குமுறை மற்றும் யுத்தம் அற்ற உலகத்தினை நோக்கி

இன, மத அடிப்படையில் பிளவு படுத்தப்பட்டுள்ள ஒரு நாட்டில் எவ்வாறு ஜனநாயகம் இருக்க முடியும? தற்போது கூட உலக முதலாளித் துவத்தின் முகவர்கள் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா ஆகிய இருவரும் மக்களை ஒன்றிணைத்து தேசிய ஐக்கியத்தினை உருவாக்காமல் ஜனநாயகப் பிரியர்கள் போல் நாடகமாடுகின்றனர். தமிழ் மக்களின் சுயாட்சி உரிமைக்காக மிகத்தீவிரமாக நடத்தப்பட்ட எழுச்சியை இருவருமே சேர்ந்து நசுக்கினர். இருவரும் தமது எஜமான்களுடன் ஆடிப்பாடி வெற்றியைக் கொண்டாடினர். அந்த வேளையில் தான் தொழிலாளர்களின் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின வேலைநிறுத்தங்கள் அவர்களை ஒரு புதிய விவாதத்துக்குள் தள்ளியது அடுத்து அவர்கள் இருவரும் மக்களுக்கு முகம் கொடுப்பதற்கு இருதலைப் பாம்பு போல் தோன்றினர். ஆம் இரு கிழர்ச்சிகளிலும் நாம் தோற்று விட்டோம். ஆனால் தொழிற்சங்கப் போராட்டத்தில் நாம் அவர்களை பின்தள்ளியுள்ளோம் அவர்கள் இப்போது ஜனாதிபதி தேர்தலை சந்திப்பதற்கு ஒத்த கொள்கையினை வெவ்வேறு கோலத்தில் முன்வைக்கின்றனர். நாம் ஒன்றிணைந்து இருவருக்கும் சரியான பதிலடி கொடுப்போம். அவ்வாறாக் முன்னேறி ஐக்கிய இலங்கையை உருவாக்கி உலக முதலாளித்துவத்தின் உத்தரவுகளுக்கு முகம் கொடுப்போம். நாம் எமது பலத்தை கட்டியெழுப்புவோம். ஆதிக்கம் சுரண்டல் அடக்கியாளுதல் மற்றும் யுத்தம் அற்ற உலகம் காண்போம். என உயர்ந்த நோக்கம் கொள்வோம். வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் என்ற பிரிக்கப்பட்ட எல்லைகளை ஊடறுத்து ஒற்றுமையை வளர்ப்போம். ஒரு ஐக்கியமான சுதந்திரமான ஜனநாயக மக்கள் குடியரசை இலங்கையில் அமைப்போம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை குற்றவாளி அல்ல

கலாநிதி விக்ரமபாகு



சில பண்டிதர்கள் இலங்கையில் நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமைதான் காரணம் என நியாயம் கற்பிக்கின்றனர். இந்த விடயத்தின் பக்கமே கவனம் திருப்பப்படு கின்றது. மேலும் இவர்கள் மகிந்த ராஜபக்ஸ அரசியல் அமைப்பை திருத்தம் செய்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது ஒழிக்க முன் வருகிறார் இல்லை எனவே அவரை தோற்கடிக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.இதை வேறுவார்த்தைகளில் கூறுவது என்றால் இவர்களின் முழுப் பிரச்சாரமும் பேரினவாதத்தின் பிரதிநிதியாக இருக்கும் மகிந்த ராஜபக்ஸ நிறைவேற்று ஜனாதிபதி முறையையும், 17வது அரசியல் திருத்தம் தொடர்பாகவும் அதிகம் அக்கறை காட்டவில்லை என்பதே அவர்களின் ஆதங்கமாக உள்ளது.

எனவே இந்த அடிப்படையில் இவர்களது எதிர்பார்ப்புக்களால் யுத்த காலத்தில் மகிந்த ராஜபக்ஸ புரிந்துள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் அவரது நான்கு ஆண்டு கால ஆட்சியில் நடைபெற்று வரும் அழிவுகள், நாசங்கள் அனைத்தும் மறைக்கப்படுகின்றன. எனவே இவர்களின் தர்க்கத்தை உற்று நோக்குகின்ற போது மகிந்த ராஜபக்ஸ இவளவு கொடுமையாளராக மாறியதற்கு அரசியல் அமைப்பின் ஏற்பாடுகள் காரணமாகவே அவர் இந்த நிலைக்கு செல்லக் காரணம் என்றே அர்த்தப்படுகின்றது.மேலும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை வெளிபடைத் தன்மைக்கு தடையாக இருப்பதால் ஊழல்கள் மோசடிகள், மகிந்த ஆட்சியில் நிறைவேற்று ஜனாதிபதி முறையூடாக கொடிகட்டி பறக்கின்றது என்றும் கூறப்படுகின்றது. இந்த விடயத்தில் சில தமிழ், முஸ்லீம் பண்டிதர்களளும் இணைந்து கொண்டு, சிறுபான்மையினருக்கு எதிராக மகிந்த ராஜபக்ஸ மேற் கொண்ட யுத்தம், புறக்கணிப்புக்கள்யாவற்றுக்கும் இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைதான் காரணம் என வாதிட்டு வருகின்றனர்.

## அரசிலமைப்பு முரண்பாடுகள்

இவற்றோடு சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ணயம் போன்ற கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கும் இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கப்பட வேண்டும் என எண்ணுகின்றார்கள். எனவே இங்கே முடிவாக தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை, தாக்குதல்கள் புறக்கணிப்புக்கள், கத்தோலிக்க தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் இவை எல்லாவற்றுக்கும் இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைதான் காரணம் என்ற நிலைக்கு வரப் போகின்றோமா? இதன் மூலம் மகிந்த ராஜபக்ஸ அரசாங்கத்தில் இருக்கும் பேரினவாத சக்திகள் தப்பித்துக் கொள்ள வழி யேற்படுகின்றது. ஏனென்றால் இதைப் புரிந்தவர்கள் யாவரும் அரசியல் அமைப்பின் ஏற்பாட்டினாலேயே இதை செய்துள்ளனர் என்றே அர்த்தப் படுத்தப் படுகிறது.

உண்மையாகவே நிறைவேற்று அதிகார முறைமை மிகவும் மோசமானதாகும் அதை இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. இதைதான் நான் 1978ல் கூறியிருந்தேன் ஆனால் இன்று இதை ஒழிக்க வேண்டும் என்று கூறுகின்றவர்கள் அன்று நித்திரையிலோ, அல்லது ஜே. ஆரின் சோசலிச ஜனநாயகத்திற்கு ஒத்து ஊதுகின்றவர்களாகவோ இருந்தனர். இதன் விளைவாக இந்த நாட்டின் ஜனநாயக விழுமியங்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே தற்போது விழித்தெழுந்துள்ள இந்த பண்டிதர்கள் ஜனநாயகத்திற்கு முக்கிய பிரச்சினையாக அடையாளப் படுத்தி கடுமையாக செயற்பட்டு வருகின்றனர்.

இந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட வேண்டும். அது நிறைவேற்ற முறைமையுடைய ஜனாதிபதி முறைக்காக மாத்திரம் அல்ல முக்கியமாக இந்த அரசாங்கம் மனிதத்துவத்துக்கு எதிரான மேற்கொள்ளும் யுத்தத்திற்காக ஒடுக்கு முறையுடன் கூடிய உலக முதலாளித்துவ கொள்கைகளை கொண்டிருப்பதால் தோற்கடிக்கப்பட வேண்டும். நிறைவேற்றுள அதிகார முறைமை இருக்கோ இல்லையோ, மகிந்த அரசாங்கத்திற்கு பின்புலமாக நிற்கும் டெல்லி பிராமணிய தளமும் மேற்குலக அதிகார சக்திகளும் இந்த அழிவுகளுக்கும் நாசங்களுக்கும் காரணகர்த்தாக்கள் ஆவர். நாங்கள் இந்த அரசாங்கம் அரசியல் அமைப்பை கூடாத செயற்பாட்டிற்காக பாவிப்பதற்கு எதிரான விவாதத்திற்கு முன்பாக, இந்த அரசாங்கத்தை அரசியல் ரீதியாக எதிர்க்க முன்வர வேண்டும். இந்த அரசாங்கத்தின் சமூக் பொருளாதார கொள்கைகக்கு எதிராக போராட முன்வரவேண்டும்.இதேநேரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு முன்பாக அதிகார பகிர்வை முதலில் வலியுறுத்த வேண்டும். இங்கே ஜே. வி. பியினர் நிறைவேற்று அதிகார முறைமை கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதிலேயே கவனமாக இருப்பதோடு, அதிகாரபரவலாக்கல் விடயத்தை ஓரம்கட்ட பிரயத்தனம் செய்கின்றனர். தமிழ மக்களை பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட முறைமையைவிட பாராளுமன்ற முறைமை வரவேற்கத்தக்கது என வாதிப்பது பிழையானதாகும். எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரறாயக்கா, டட்லி சேனநாயக்கா ஆகிய இருவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக இருந்தபோதும் எதிர்தரப்பினரின் அழுத்தத்தின் காரணமாக அதிகார பகிர்வை கைவிட்டதையும் நாம் மறந்துவிட முடியாது. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜே.ஆர். எதிர்தரப்பின் எதிர்ப்பை தாக்கி அழித்துவிட்டு 13வது திருத்தத்தை உருவாக்கியதுடன் தமிழ் தாயகத்திற்கு ஒரு முதலமைச்சரையும் வரச் செய்தார்.நிச்சயமாக 13வது திருத்தம் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்பது தெரிந்தவிடயமாகும். ஆனால் சிங்கள பேரினவாத காடைத்தனத்திற்கு எதிரான நகர்வாகும்.

## மகிந்தவின் பலவீனம்

நிறைவேற்று அதிகாரமுறைமையினால் தான் மகிந்த அவர்கள் அரசியல் தீர்வை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முன்வைக்கவில்லை என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.மகிந்த நிச்சயமாக தமிழ் மக்கள் தொடர்பில் அவர் கொண்டிருக்கும் ஒடுக்கு முறையுடன் கூடிய பிற்போக்கான கொள்கைக்காக தோற்கடிக்கப் படவேண்டும். மேலும் பேரினவாதத்திற்கு ஆதரவாகவும், உலக முதலாளித்துவ சுரண்டலுக்கு ஆதரவாகவும் இருப்பதால் அவர் தோற்கடிக்கப் படவேண்டும். அதேநேரம் பிற்போக்கு சிந்தனை கொண்ட ஜெனரல் சரத் பொன்சேகாவை நிறைவேற்று அதிகாரமுறைமையை நீக்குவதற்காக முதலீடு செய்வது கண்ணை மூடிக்கொண்டு கிணற்றுக்குள் விழுவதற்கு சமமாகும். இதில் இருந்து மீள ஒரேவழிதான் உண்டு அதாவது இடதுசாரி பொது வேட்பாளரின் ஊடாக ஜனநாயகத்தையும் நாட்டின் ஐக்கியத்தையும் வலுப்படுத்துவோம்.

........ 1

## பிரதான இரு ........................

சட்டத்தையும் ஆதரித்து வந்த ஐக்கிய தேசிய கட்சியை தமிழ் மக்கள் நம்பமுடியுமா? இன்று தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை காத்திரமாக காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வருகின்ற ஜனாதிபதி தேர்தல் மூலம் மாற்று சக்தி ஒன்றை மூன்றாவது அணி ஒன்றை உருவாக்க வேண்டியதுஎமது தலையாய கடமையாகும்.தமிழ் மக்ட தமிழ் மக்களின் விடுதலைக்காக ஊயிர்நீத்தவர்கள், சொத்துக்களை இழந்தவர்கள், என இலட்சக்கணக்கான மக்களின் துயர நிலைக்கு காரண கர்த்தாக்களாக இருக்கும் இரண்டு வேட்பாளர்களையும் நாம் ஒருபோதும் ஆதரிக்க முடியாது. தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்கும் முடிவு இந்திய ஆட்சியாளரின் துரோகத்துக்கும், ஏகாதிபத்திய சக்திகளின் சதிகளுக்கும் வழங்கப்படும் தண்டனையாக அமையவேண்டும்.

32 வது ஆண்டு
விழா
2009 12 30
பி.ப 3.00 மணிக்கு
புதியநகர
மண்டபத்தில்
புதிய சமதர்மம்
வாழ்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது பதவிக்காக தமிழ் மக்களை சரணடையச் சொல்கிறாரா மனோகணேசன்!

சுந்தரம் மகேந்திரன்.

ஐக்கிய தேசிய முன்னணி ஜெனரல் சரத் பொன்சேக்காவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தினால் உடனடியாக அம் முன்னணியில் இருந்து வெளியேறுவேன் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் அறிவித்திருந்தார். தனது இந்த நிலைப்பாட்டை ஆதரித்து செயல் படும்படி ஏனைய எதிர்கட்சிகளுக்கும் பலவிதத்தில் அளுத்தங்களை கொடுத்த வண்ணம் இருந்தார். இவரின் மிரட்டல்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி இடம் கொடுக்கவில்லை. இத்தகைய சூழ்நிலையில் ஜெனரல் சரத்பொன்சேக்காவின் பிரதிநிதி ஒருவர் மனோகணேசனுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். இப் பேச்சுவார்த்தையின் பின்னர் ஜெனரல் சரத்பொன்சேக்காவிற்கு எதிரான மனோகணேசனின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் காணப்பட்டன.

இதன்பின்னர் ஜெனரல் சரத்பொன்சேக்கா தமிழ் மக்கள் தொடர்பாக தமது நிலைப்பாட்டடை வெளிப்படுத்த வேண்டும் என மனோகணேசன் அறிக்கை விட்டிருந்தார். தமிழ் மக்கள் தொடர்பாக சரத் பொன்சேக்கா என்ன நிலைப்பாபட்டில் உள்ளார் என்பது மனோகணேசனுக்கு தெரியாமல் போனது பெரும் விந்தையான விடயமாகும். மேலும் இவர் ஏன் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளராக சரத் பொன்சேக்காவை நிறுத்தினால் அணியின் உறவை முறிக்க போவதாக அறிவித்திருந்தார். சிலநாட்களுக்கு முன்பு இவரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சரத்பொன்சேக்காவை ஆதரிப்பது தொடர்பாக நான்கு அம்ச கோரிக்கையை வெளியிட்டிருந்தார். இந்த நான்கு அம்சமும் மறைமுகமாக சரத் பொன்சேக்காவை ஆதரியுங்கள் என்றே வலியுறுத்திருந்தது.



ஐக்கிய தேசிய கட்சி சரத் பொன்சேக்காவை எதிர்கட்சி வேட்பாளர் என வெளிப்படுத்திய பின்னர், தனது நிலைப்பாட்டை டிசம்பர் மூன்றாம் திகதி வெளியிடப்போவதாக அறிக்கை விட்டிருந்த மனோகணேசன்,3ம் திகதி தனது நிலைப்பாட்டை மீண்டும் நான்கு அம்ச அடிப்படையில் வெளியிட்டிருந்தார். இவருக்கு ஏன் இந்த நான்கு அம்சங்கள்தான் எதற்கு எடுத்தாலும் வருகிறது என்பது புதிராகவே உள்ளது. இவரது புதிய நான்கு அம்சத்தில் அவர் வெளிப்படுதுவதாவது தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ஸவை ஆதரிப்பதா, அல்லது சரத் பொன்சேக்காவை ஆதரிப்பதா? அல்லது பகிஸ்கரிப்பதா என கோர்வையாக விளக்கங்களை கொடுத்து சரத் பொன்சேக்காவை ஆதரிப்பதை தவிர வேறு வழியில்லை என தமிழ் மக்களை ஏற்கவைக்க முனைகிறார்.

மனோகணேசன் ஐக்கிய தேசிய கட்சியை மலைபோல் நம்பியே களத்தில் உள்ளார். ஐக்கிய தேசிய கட்சி தமிழ் மக்களுக்கு பறித்த குழிகளை தமிழ் மக்கள் நன்றாகவே புரிந்துள்ளனர். இதன் காரணமாகவே அண்மையில் வடக்கிலும், வவுனியாவிலும் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை முற்றாகவே தமிழ் மக்கள் நிராகரித்திருந்தனர். இதற்கு மனோகணேசன் கூறும் பதில்தான் என்ன? தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது வெளிநாடுகளில் வாளும் தமிழ் மக்கள் தனது அறிவுரையை கேட்டு செயல் படவேண்டும், வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்களுக்கு நானே ஏகதலைவன், வடக்கு கிழக்கு தலைமைகள் எனது அறிவுரையை கேட்டு நடவுங்கள் என கட்டளையிடும் மனோகணேசன் ஏன்தான் இவ்வளவு புலம்பல்களுக்குள் வாழ்கின்றார் என்பது உற்று நோக்கினால் புரிந்து கொள்ள முடியும். இவரை பொறுத்தவரை இவரது பதவி இவருக்கு முக்கியம் எனவே தமிழ் மக்கள் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிக்கவேண்டும்.

தமிழக முதல்வர் கருணாநிதி உலக தமிழ் மக்களுக்கெல்லாம் தலைவர் எனக் கூறி இறுதியில் ஈழத்தமிழ் மக்களுக்கு அவர் வெட்டிய குழியை எம் கண்முன்னே பார்த்தோம். தனது குடும்ப அரசியலுக்காக கருணாநிதி செய்த துரோகத்தை முழு உலகத் தமிழினமும் ஒருபோதும் மன்னிக்காது. இன்று கருணாநிதி போன்றே மனோகணேசனும் தனது பதவிக்காக தமிழ் மக்களின் விடுதலை உணர்வை சரணாகதிக்கு கொண்டு செல்லுகிறார்.

இதேநேரம் ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னால் கொழும்பு மாநகர உதவி மேயருமான ஆசாத்சாலி ஜெனரல் சரத் பொன்சோக்காவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்ததற்கு அவர் தனது எதிர்ப்பை தெரிவித்ததுடன், ஊடகங்களுக்கும் தனது வெளிப்படையான கருத்தை கூறியிருந்தார். இதனால் அவரருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. "அதாவது ஆசாத்சாலி சொன்னது என்னவென்றால் சரத் பொன்சேக்கா சிறுபான்மை இனத்துக்கு எதிராக அவர் பதவியில் இருந்த காலப்பகுதியில் மேற்கொண்ட செயற்பாடுகளும்,கருத்துக்களும் தன்னால் மறக்க முடியாத ஒன்றாகும்" என்பதேயாகும்.

ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய தலைவராக இருக்கின்ற ஆசாத்சாலியே எதிர்த்து குரல் கொடுக்கும் போது தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதாக கூறும் மனோகணேசனால், சரத் பொன்சேக்காவை எதிர்த்து இக்கூட்டணியில் இருந்து வெளியேற முடியாமல் போனது, தமிழ் மக்களின் துரதிஸ்ட வசமே. தென் இலங்கையில் ஏக தலைவனாக தன்னை காட்டும் இவருக்கு ஊவா மாகாணத்தில் என்ன நடந்தது? உண்மையில் இவரது விளம்பரயுக்தி அங்கே செல்லாக்காசாகியது என்பது மட்டுமே உண்மையாகும்.

வெறும் பாராளுமன்ற அங்கத்தவர் பதவி ஒன்றுக்காக ஐக்கிய தேசியகட்சி தமிழ் மக்களுக்கு செய்த துரோகங்கள், அடிக்கும் குத்துக் கரணங்கள் யுத்த வெற்றியில் கலந்து கொண்டு பாற்சோறு உண்டமை, தமிழ் தேசிய போராட்டத்தை இல்லாது ஒழிப்பதற்கு தாம் செய்த சாதனைகள் என்று கூறிவருவதை, பேரினவாத சக்தியான ஜே. வி. பியுடன் கொண்டுள்ள உறவை, தமிழ் மக்களை மறக்கச் சொல்லுகிறார் மனோகணேசன்.

அதேசமயம் கடந்த தினக்குரல் ஞாயிறு இதழில் கலாநிதி கீதபொன்கலன் ஜனாதிபதித் தேர்தலும் தமிழ்க் கட்சிகளும் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். மனாகணேசன் நேரடியாக தமிழ் தேசிய கூட்டமைப்பை தம்முடன் இணைந்து கொள்ள வேண்டும் என்ற அழைப்பை விடுத்ததுடன் தமிழ் மக்கள் சரத் பொன்சேக்காவிற்கு வாக்களிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். பொன்சேக்கா வெற்றி பெறுவது நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் நன்மை பயக்கும் என்று அவர் நிச்சயம் கருதுவதாகவும், அதேநேரம் சரத் பொன்சேக்கா பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை அடிப்படையாக கொண்டவர் என்பதும் இலங்கை சிங்களவருக்கு சொந்த மானது, இங்கு சிறுபான்மையினர் தங்கி இருக்கலாம் என்ற அபிப்பிராயத்தை உடையவர் என்பதும் யுத்தகால மனித உரிமை பிரச்சினைகளுடன் அதொடர்புடையவர் என்பதும் நாம் அறிந்ததே இத்தகைய பின்னணியில் மனோகணேசனின் வேண்டுகோளை ஏற்று வாக்களிப்பதற்கு முன்னர் நாம் அவரிடம் கேட்க வேண்டிய இரண்டு கேள்விகள் உள்ளன. (1) சரத் பொன்சேக்கா வெற்றி பெற்றதும் தமிழ் மக்களின் நலனுக்காக மனோகணேசன் மன்வைக்கும் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவார் என்பதற்கு என்ன உத்டதரவாதம் உள்ளது. (2) வெற்றி பெற்ற பின்னர் அவரும் சிறுபான்மை நலன்களை ஒடுக்குகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவாராயின் அதற்கு எதிராக மனோகணேசன் வைத்துள்ள மாற்றுத்திட்டம் என்ன? இதே கேள்வியைதான் நாமும் அவரிடம் கேட்கின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இல்லாத ஒரு அணியை மனோகணேசன் ஏன் சிந்திக்க மறுக்கிறார். பல தியாகங்கள், இழப்புக்கள் என்பவற்றின் ஊடாக வே தமிழ் மக்கள் தமது விடுதலையை அடைய முடியும். தனது பதவியை இழக்க விரும்பாத ஒருவரை நம்பி தமிழ் மக்கள் எப்படி தமது இலட்சியத்தை கைவிட முடியும். சுயநிர்ணயம், சுயாட்சி, என்பவற்றின் அடிப்படையில் தமிழ் மக்களின் விடுதலை போராட்டம் பயணத்தை தொடங்கி வெகு நாட்களாகி விட்டது தனது பதவி ஒன்றுக்காக இடையில் வந்து மனோகணேசன் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை சரணாகதிக்கு கொண்டு செல்வது எந்த விதத்தில் நியாயமாகும். எனவே தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டில் யார் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அல்லது சுயாட்சி போன்றவற்றை உறுதிப்படுத்தும் ஒருவருக்கு ஆதரவு கொடுப்பதே சாலச்சிறந்ததாகும்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தற்போது தமிழ் மக்கள் தமது ஐக்கியத்தை சிதைத்துவிடாது செயற்பட வேண்டும் என கூறி வருகிறார் அவரே இதில் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும் என நான் எண்ணுகிறேன் ஏனென்றால் அவர் முகாம் இட்டு இருக்கும் ஐக்கிய தேசியகட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க, றோசி சேனநாயக்கா, லக்ஸ்மன் செனிவிரத்ன, தயாசிறி ஜெயசேகரா போன்றோர்கள் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை தாமே சிதைத்ததாக மார்தட்டி வருகின்றனர். எனவே கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் சிதைத்தவர்களுடன் இருந்து கொண்டு சிதைக்க வேண்டாம் என்று கூறி வருவது வேடிக்கைக்குரியதாகும் மேலும் தமிழ் மக்கள் வரட்டு சித்தாந்தத்திற்கும் முட்டாள் தனமான முடிவுகளுக்கும் இடம் கொடுக்க வேண்டாம் என கூறிவருகின்றார். உண்மையான விடுதலை பற்றி பேசினால் மனோகணேசனுக்கு வரட்டு சித்தாந்தமாகவும் தமிழ் தலைமைகள் தனித்துவத்தை பேணினால் முட்டாள் தனமாகவும் தெரிகிறது. ஜனாதிபதி தேர்தல் அவரின் பல சந்தேகங்களுக்கு தகுந்த பாடத்தை வழங்கும்

( இந்த கட்டுரையை தினசரி பத்திரிகைகள் எவையும் பிரசுரிக்க முன்வரவில்லை என மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றேன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 0112430621 தொ. மடல். 0112305963
ஈமெயில்: putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

பதிவு செய்யப்பட்ட செய்தி பத்திரிகையாகும்

# தமிழ் மக்களும் தெற்கின் இடதுசாரிகளும்

இன்று நாடு முக்கிய கட்டத்தில் பயணித்து கொண்டு செல்கின்றது. கடந்த 60 ஆண்டு காலம் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் இந்த நாட்டை மோசமான நிலைக்கு கொண்டு சென்றுள்ளார்கள் என்பது பற்றி சொல்லத் தேவையில்லை இவர்களின் புறக்கணிப்புக்களால்தமிழ் மக்கள் சந்தித்துள்ள இழப்புக்களை வார்த்தைகளில் கூற முடியாது. இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பது இன்று நன்றாகவே வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இலங்கையின் ஆளும் தரப்பும், இந்திய வல்லாதிக்க சக்திகளும், ஏகாதிபத்திய சக்திகளும், இன்று ஒரே அணியில் செயல்படுகின்றன. அங்கனம் இல்லை அவர்களுக்குள் முரண்பாடுகள் உள்ளன அந்த முரண்பாடுகள் தமிழ் மக்களின் விடுதலைக்கு உதவும் என மூலோபாயம் வகுத்த விற்பனர்கள் இன்று மௌனமாகிவிட்டனர். யுத்தத்தின் இறுதி இருநாட்களில் வன்னிப்பகுதியில் அழிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக ஏகாதிபத்திய சக்திகளும், இந்திய வல்லாதிக்க சக்திகளும் என்ன செய்தன என்பது எம் எல்லோருக்கும் புரிந்தவிடயமாகும். உலகத்தமிழ்னின் தந்தை என தன்னைபுகளும் கருணாநிதி கூட இந்த துயரத்திற்குபங்காளியாவார். எனவே வரலாறு தந்த இந்த படிப்பினையை அனுபவமாக கொண்டு எமது எதிர்கால விடுதலைப் பயணத்தை நாம் திட்டமிட வேண்டும். தமிழ் மக்கள் தமக்குள் ஐக்கியப்பட வேண்டும், இதனை அடுத்து தென்இலங்கை முற்போக்கு சக்திகளின் ஆதரவு தளத்தில் தமது விடுதலைப் போராட்டத்துக்கான செல்வாக்கை வளர்க்க வேண்டும். எமது விடுதலைக்கான முதல் நிபந்தனையாக இது அமைய வேண்டும். இத்தகைய நிலை சகல செயற்பாடுகளிலும் சங்கமிக்க வேண்டும். சாதாரண போராட்டங்களில் இருந்து ஜனாதிபதி தேர்தல் வரை இந்த ஐக்கியம் சிறந்த முறையில் பேனப்பட வேண்டும்.

பாரம்பரிய இடது சாரிகள் தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்தை பேசிக் கொண்டு இருப்பதால் பயன் ஏதும் இல்லை. பாரம்பரிய இடதுசாரிகள் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல தொழிலாளர் வர்க்கத்திற்கும் அவர்கள் துரோகமே செய்தனர். இதனால் அவர்களின் அடையாளமே இன்று இல்லாமல் போகும் நிலை உருவாகியுள்ளது. இன்றும் தமிழ் மக்களின் வலதசாரி சக்திகள் தென் இலங்கை வலது பிரிவுடன் தொடர்புகளை பேணியே வருகின்றனர். இதை அவர்கள் சாதாரண விடயாமாகவே எண்ணுகின்றனர் ஆனால் இடதுசாரி சக்திகளுடன் முற்போகக்கு சக்திகளுடன் உறவை வளர்ப்பற்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்துகின்றனர். தமிழ் மக்களின் விடுதலை போராட்டம் சர்வதேச ரீதியான ஆதரவை பெறுவதற்கு தென் இலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளின் ஆதரவை பெறவேண்டியது கட்டாயமானதாகும். இதில் இரண்டாம் பேச்சுக்கு இடம் இல்லை. தென் இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல் கொடுப்பவர்களுக்கு பேரினவாதிகளும், அவர்களுக்கு சார்பான ஊடகங்களும், பல்வேறு வழிகளிலும் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். இத்தகைய நிலையில் தென் இலங்கை இடதுசாரி சக்திகளுக்க தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்க முன்வரவேண்டும். இன்ற சில வலதுசாரி பிரிவினர் தென் இலங்கையில் இடதுசாரிகளுக்கு செல்வாக்கு சரிந்துள்ள நிலையில் அவர்களுக்கு ஏன் ஆதரவை வழங்க வேண்டும் என குதர்க்கம் பேசுகின்றனர்.

உண்மையான இடதுசாரிகள் இனம், மதம், மொழி கடந்தே செயற்படுவார்கள், அத்தகைய இடதுசாரிகளை ஒரு இனத்துக்குரிய வகையில் அடையாளப்படுத்துவது அரசியல் அனாகரீகமாகும். 1950ம் காலப்பகுதியில் இந்த நாட்டின் இடதுசாரி சக்திகளுக்கு தமிழ் மக்கள் வழங்கிய அமோக ஆதரவினாலேயே இந்த நாட்டின் அரசியலில் அதிக தாக்கத்தை அவர்கள் செலுத்தினர் பின்னர் அவர்கள் செய்த துரோகத்தால் அந்த நிலைமை இல்லாமல் போனது.

எனவே மீண்டும் நாம் ஐக்கியபட்ட செயற்பாட்டின் ஊடாக இந்த நாட்டின் மாற்றத்துக்கான அடித்தளத்தை இடுவோம். இதன் மூலம் இந்த நாட்டின் தமிழ் மக்கள் மாத்திரமல்ல ஒடுக்கப்பட்ட சகல பிரிவினரும் விடுதலை பெற்வழி ஏற்படும்.

வாகர்களுக்கு..!

உங்கள் கருத்துக்களை தவறாது எழுதுங்கள் மாற்றுக் கருத்துக்களாயினும் பிரசுரிப்போம். உங்கள் ஆதரவு எங்கள் பணிகளை ஊக்குவிக்கும்

தொடர்பு முகவரி

வாசகர் கருத்துக்களம்
புதிய சமதர்மம்
143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 2430621 தொ. மடல். 2305963
putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info




# காணாமற் போனோரின் போராட்டம்



மனித உரிமை தினத்தில் தமது உறவுகளை தேடித்தருமாறு கோரும் மகஜரில் உறவினர்கள் கையெழுத்து இடுவதை காணலாம்




மனித தினத்தன்று தமது உறவுகளை தேடிதருமாறு உறவுகள் ஊர்வலமாக செல்வதை காணலாம்



மாளிகாவத்தை முஸ்லீம் இளஞர்களை கடத்தி கொலை செய்வதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதை காணலாம்




12000 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வதைகாணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org